1st April 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது 'டெடின்யூ' ஆக திரு. கருணாநிதி அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார். பாதுகாப்புச் சட்டத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. எந்தப் பிரிவின் மீதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கலாம். இப்போது கனம் எதிர்க் கட்சித் தலைவர் திருநெல்வேலியில் ஏதோ சில பேர்களைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து வைத்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தால் அது வேறு விஷயம். பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் எந்தெந்த பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சீன ஆக்கிரமிப்பு வந்தபோது முரசொலி பத்திரிகை மூலமாக 500 ரூபாய், எங்களிடம் மட்டுமின்றி பலரிடமிருந்து வசூல் செய்து கொடுத்திருக்கிறார். அப்படி சீனக்காரனை இந் நாட்டிலிருந்து வெளியேற்றுவதில் முன்னின்று ஆர்வம் காட்டின திரு. கருணாநிதி அவர்களைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்வது நியாயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாட்டின் பாதுகாப்புக்காக திரு. கருணாநிதி பணம் கொடுக்க முன்வந்தார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இங்கிலாந்தில்கூட, யுத்த காலத்தில் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் நாட்டின், எதிரிகளோடு கலந்து கொண்ட காரணம் மட்டுமல்ல, வேறு பல காரணங்களும் உண்டு. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள், எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். இங்கிலாந்தில் யுத்த காலத்தில் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால் அவர்கள் எதிரியோடு சேர்ந்து விட்டார்கள் என்று பொருள் இல்லை.

Chief Ministers' deliberations on Language policy

* 399 *Q.*—SRI T. P. ALAGAMUTHU : SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a gist of the proceedings of the Conference of Chief Ministers held on 23rd and 24th February 1965 regarding the language policy?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A copy of the statement[a] made by the Prime Minister of India in Parliament regarding the meeting of Chief Ministers of States held on the 23rd and 24th February 1965 is placed on the Table of the House.

புலவர் கா. கோவிந்தன் : அதிலே, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த மக்களுக்குச் சம வாய்ப்புகள் அளிக்கவேண்டும் என்பதற்கு அரசியல் அமைப்பில் வகை செய்யப்பட்டுள்ளது.

---

a Printed as Appendix I on pages 811–813.

இதை உறுதிப்படுத்தும் முறையில் முதல் அமைச்சர்கள் வற்புறுத்தினர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தி மத்திய ஆட்சி மொழியாகிவிட்டால் ஒருவரின் தாய்மொழி ஆட்சி மொழியாகிறது. மற்ற மாநில மக்களுக்கு வேறு ஒரு மொழி ஆட்சி மொழியாகிறது என்ற நிலை ஏற்பட்டுச் சம வாய்ப்பு நிலை கெடுகிறது என்பதை அரசாங்கம் உணருகிறதா ? அதில் என்ன மாற்றம் செய்யப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது இந்த அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சியினருக்கும் உள்ள அடிப்படையான கருத்து வேற்றுமை. ஆனல் எதிர்க்கட்சிக்கு எப்போதும் அந்தக் கருத்து வேற்றுமை இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. எதிர்க்கட்சித் தலைவர் மாபெரும் தலைவர் டெல்லியில் பேசியதில் குறிப்பாக இந்தி பற்றி பேசியதிலிருந்து இந்தி மற்ற மொழிகளைப் போல் அல்லாமல் இந்தி ஒரு பொது மொழியாகக் கூடும் என்ற கருத்து அதில் தொனிக்கிறது. அது இல்லை என்று எதிர்க்கட்சியினர் மறுக்கலாம். ஆகவே, இது அடிப்படையான விஷயம். நேற்று நான் விளக்கியது போல் அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இந்தி பொது மொழி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தியோடுகூட வேறு மொழிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதில் பயன் இல்லை. ஆனல் இந்தி ஒரு பொது மொழியாக இருக்கும் என்றாலும் வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட எந்தப் பிரஜைகளும், தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், மராத்தி, குஜராத்தி என்று எதைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு இதனல் பாதகம் ஏற்படக்கூடாது என்ற கருத்துத்தான் அங்கு தெரிவிக்கப்பட்டது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தி பற்றி எங்கள் கட்சித் தலைவர் ராஜ்ய சபாவில் பேசிய பேச்சினை பூர்ணமாக நம் முதல் அமைச்சர் அவர்கள் படிக்காத காரணத்தினலோ என்னவோ இந்தியை அவர் வரவேற்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இது தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோல் இருக்கிறது. அவர் பேச்சை சரியாகப் படித்து விட்டு பதில் சொல்வார்களா ?

MR. SPEAKER : All these insinuations can be avoided.

SRI V. KRISHNAMOORTHY : I am not insinuating anybody but he (Hon. Chief Minister) should not insinuate my leader without going through his speech. We are representing a party of which he is the leader. Without reading the full text of his speech, the Hon. the Chief Minister is rather misleading the House.

SRI K. A. MATHIALAGAN : Sir, he must read the full speech. I have completely read through the speech of my leader. I have got a copy of his speech and the Hon. Speaker can go through it.

MR. SPEAKER : That is a different matter. But why should the hon. Member, Sri Krishnamoorthy, insinuate?

1st April 1965]

SRI K. A. MATHIALAGAN : This is a copy (the hon. Member was seen showing a copy) of my leader's speech and the Hon. Speaker can find out the truth. Every day, every minute the Hon. the Chief Minister is insinuating inspite of our repeated denials and he goes on as he does in his street corner meetings.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat. *'அதில் தொனிக்கிறது' என்றுதான் சொல்கிறார்கள்.* He does not say that he has stated like that. Even if he has stated, the hon. Member can say that it is not so and he is perfectly entitled to do that. But why should there be personal insinuation?

SRI K. A. MATHIALAGAN : Even after it has been corrected, he goes on harping on his own point without any justification. That is my submission.

MR. SPEAKER : The hon. Member can say that it is absolutely incorrect.

SRI K. A. MATHIALAGAN : I can file a copy of my leader's speech and the Hon. Speaker can peruse it.

MR. SPEAKER : It is not for me to go through it. Suppose he makes an incorrect statement, the hon. Member is entitled to say that it is incorrect.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *பொதுக் கூட்டத்தில் பேசுகிற மாதிரி யார் பேசுகிறார்கள் என்பதை மற்ற மன்ற உறுப்பினர்கள் உணருவார்கள். இந்தப் பிரசங்கத்தைப் பற்றிக் கூறினார்கள் அதைப் பற்றி விளக்கிக் கூற நாளை மறுதினம் அவகாசம் இருக்குமென்று நம்புகிறேன். உப கேள்வி கேட்பது ஆங்கிலத்திலானாலும் சரி, தமிழிலானாலும் சரி வேறுவிதமாகக் கேட்க முடியாது. ஆகவே அதுபற்றி விடை அளிப்பதற்கில்லை.*

SRI K. A. MATHIALAGAN : Sir, does not the Hon. Speaker think that the reply of the Hon. the Chief Minister is an insinuation? I want to raise a point of order.

MR. SPEAKER : Let the hon. Member raise a point of order.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. Is it befitting the status and the position of Hon. the Chief Minister to say "*வேறு விதமாகக் கேட்க முடியாது*".

MR. SPEAKER : There is no point of order. Let the hon. Member please resume his seat.

Chief Ministers on continued use of English

* 400 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the proposals made at the recent conference of the Chief Ministers, regarding the continued use of English after 26th January 1965 and the details of the conclusions reached at the Conference?